**இன்சொலால் ஈத்துஅளிக்க வல்லார்க்குத் தன்சொலால்**
**தான்கண் டனைத்துஇவ் வுலகு.**

*இனிய சொற்களுடன் தக்கவர்க்குப் பொருளை உதவிக் காக்க வல்ல அரசனுக்கு இவ்வுலகம் தன் புகழோடு தான் கருதியபடி அமைவதாகும்.*

**திருக்குறள் (எண்: 387) *அதிகாரம்: இறைமாட்சி***

# வெண்கலம் வென்றார் அன்டிம் பங்கால்

மல்யுத்தம் மகளிர் பிரிவில் 53 கிலோ எடைப்பிரிவில் இந்தியாவின் அன்டிம் பங்கால் உலக சாம்பியன் ஜப்பானின் அகாரி ஃபுன்ஜியாமிடம் தோற்று வெளியேறினார். எனினும் புன்ஜியாமி இறுதிக்கு தகுதி பெற்றால் வெண்கல பதக்க ஆட்டத்துக்கு ரெப்கேஜ் முறையில் அன்டிம் போட்டியிடலாம். ரெப்கேஜ் முறையில் மங்கோலிய வீராங்கனை போலோர்டுயா பேட் ஓச்சிரை 3–1 என்ற புள்ளிக் கணக்கில் வீழ்த்தி வெண்கலம் வென்றார் அன்டிம் பங்கால். 50 கிலோ எடைப்பிரிவில் இந்தியாவின் பூஜா கெலாட் 5–2 என்ற புள்ளிக் கணக்கில் மங்கோலியாவின் சோக்ட் ஒச்சிரை வென்றார். பின்னர் நடைபெற்ற பதக்க ஆட்டத்தில் கஜகஸ்தானின் அக்டெங்கேவிடம் 2–9 எனத் தோற்றார் பூஜா. 57 கிலோ பிரிவில் மான்ஸியும் 2–5 என ஜப்பானின் சகுராயிடம் தோற்றார்.


அன்டிம் பங்கால்

ஆடவர் பிரிவில் கிரேக்கோ ரோமன் 97 கிலோ பிரிவில் நரீந்தர் சீமா, 130 கிலோ பிரிவில் இந்திய வீரர் நவீன் 0–3 என சீனாவின் மெங்கிடம் தோற்றார்.

ஸ்குவாஷ்

# தீபிகா–ஹரிந்தருக்கு தங்கம்

ஸ்குவாஷ் கலப்பு இரட்டையர் இறுதிச் சுற்றில் இந்தியாவின் தீபிகா பல்லிக்கல்––ஹரிந்தர் பால் சிங் இணை 11–10, 11–10 என்ற புள்ளிக் கணக்கில் மலேசியாவின் அய்ஃபா பின்டி–முகமது யாபிக் இணையை வீழ்த்தி தங்கம் வென்றது. 35 நிமிஷங்கள் நீடித்த இந்த ஆட்டத்தில் முதல் கேமில் 3–9 என்ற நிலையில் இருந்து 10–9 என முன்னேறியது மலேசிய இணை. தொடர்ந்து சுதாரித்து ஆடிய இந்திய இணை பின்னர் தங்கத்தை வசப்படுத்தியது. தீபிகாவுக்கு இது இரண்டாது பதக்கம் ஆகும். மொத்தமாக 4 ஆசியப் போட்டிகளில் ஒரு தங்கம், ஒரு வெள்ளி, 4 வெண்கலம் என 6 பதக்கங்களை வென்றுள்ளார் தீபிகா பல்லிக்கல். ஹரீந்தர் பால் சிங்கும் ஒட்டு மொத்தமாக ஆசியப் போட்டிகளில் 3 தங்கம், 2 வெண்கலம் வென்றுள்ளார்,.



ஸ்குவாஷ் கலப்பு இரட்டையரில் தங்கம் வென்ற ஹரிந்தர் பால் சிங்–தீபிகா பல்லிக்கல்.



சௌரவ் கோஷல்

**சௌரவுக்கு வெள்ளி:** ஆடவர் ஒற்றையர் இறுதிச் சுற்றில் இந்தியாவின் நட்சத்திர வீரர் சௌரவ் கோஷல் 11–9, 9–11, 5–11, 7–11 என்ற கேம் கணக்கில் மலேசியாவின் இயான் யோவிடம் தோற்று வெள்ளிப் பதக்கத்தை வசப்படுத்தினார். கடைசியாக 9 ஆண்டுகளுக்கு முன்பு ஆடவர் பிரிவில் இந்தியா தங்கம் வென்றிருந்தது. எதிர்கால செயல்பாடு குறித்து எதையும் சிந்திக்கவில்லை. எனினும் ஆசியப் போட்டியில் எனது செயல்திறன் திருப்தியை தந்துள்ளது என்றார்.

வில்வித்தை

# இந்தியாவுக்கு இரட்டை தங்கம்




வில்வித்தையில் தங்கம் வென்ற ஜோதி சுரேகா, அதிதி சுவாமி, பர்னீத்



வில்வித்தையில் தங்கம் வென்ற இந்திய அணியினர்

வில்வித்தை மகளிர் காம்பவுண்ட் பிரிவில் நடப்பு உலக சாம்பியன்களான ஜோதி சுரேகா, அதிதி சுவாமி, பர்னீத் கௌர் அடங்கிய இந்திய அணி 230–229 என்ற புள்ளிக் கணக்கில் சீன தைபே அணியினரை வீழ்த்தி தங்கம் வென்றனர். ஏற்கெனவே கலப்பு அணிகள் பிரிவில் ஜோதி சுரேகா–ஓஜாஸ் இணை தங்கம் வென்றிருந்தது.

சீன தைபே அணி கடும் சவாலைத் தந்த நிலையில், இறுதியில் 60/60 என அபாரமாக இலக்கை அடைந்து தங்கம் வென்றது இந்தியா.

ஆடவர் தனிநபர் காம்பவுண்ட் இறுதியில் இந்தியாவின் ஓஜாஸ்–அபிஷேக் வர்மா மோதவுள்ள நிலையில் தங்கம், வெள்ளி உறுதியாகி உள்ளது. அரையிறுதியில் இந்தோனேசியாவை வீழ்த்தியது இந்தியா. காலிறுதியில் ஹாங்காங்கை 231–220 என வென்றிருந்தது. வில்வித்தை மூலம் குறைந்தது 5 பதக்கங்களை இந்தியா வெல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**ஆடவர் அணிக்கும் தங்கம்:** ஆடவர் காம்பவுண்ட் பிரிவில் அபிஷேக் வர்மா, ஓஜாஸ் டியோடேல், பிரதமேஷ் ஜாக்கர் அடங்கிய இந்திய அணி 235–230 என்ற புள்ளிக் கணக்கில் தென்கொரியாவை வீழ்த்தி தங்கத்தை கைப்பற்றியது. ஏற்கெனவே காம்பவுண்ட் கலப்பு பிரிவிலும் இந்தியா தங்கம் வென்றிருந்தது. மொத்தமாக காம்பவுண்ட் பிரிவில் 3 தங்கத்தையும் இந்தியா கைப்பற்றியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# பேறுகால இறப்பு தடுப்பு சிகிச்சை: சிங்கப்பூருடன் தமிழகம் ஒப்பந்தம்

**சென்னை, அக். 5:** மகப்பேறு அவசர சிகிச்சைகள், பேறு கால இறப்புகளைத் தடுக்கும் பயிற்சிகளை ஒருங்கிணைந்து மேற்கொள்வதற்காக சிங்கப்பூர் சர்வதேச குழுமத்துடன் தமிழக பொது சுகாதாரத் துறை புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

சென்னை, எழும்பூரில் வியாழக்கிழமை நடைபெற்ற இதற்கான நிகழ்ச்சியில் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் இரு தரப்புக்கும் இடையே ஒப்பந்தம் கையொப்பமானது.

இந்நிகழ்வில் சிங்கப்பூர் நாட்டின் துணைத் தூதர் எட்கர் பாங், சிங்கப்பூர் சர்வதேச குழுமத்தின் இயக்குநர் விஜயா ராவ், தமிழக பொது சுகாதாரத் துறை இயக்குநர் செல்வவிநாயகம், சிறப்பு அலுவர் வடிவேலன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பமான பிறகு அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:




சென்னை எழும்பூர் அரசு நலவாழ்வு மற்றும் குடும்ப நல பயிற்சி மையத்தில் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் முன்னிலையில் வியாழக்கிழமை பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் தி.சி.செல்வவிநாயகம் – சிங்கப்பூர் சர்வதேச குழுமம் ஆகியவற்றுக்கு இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்த பரிமாற்ற நிகழ்வில் சிங்கப்பூர் குடியரசின் தூதர் எட்கர் பாங், சிங்கப்பூர் சர்வதேச குழுமத்தின் இயக்குநர் விஜயா ராவ், சிங்கப்பூர் கே.கே.பெண்கள் மற்றும் குழந்தைகள் மருத்துவமனை சீனியர் கன்சல்டன்ட் டாக்டர் ஃபாலி தாகூர் உள்ளிட்டோர்.

தமிழகத்தில் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களின் அவசரகால மகப்பேறு சிகிச்சைகள், பச்சிளங்குழந்தைகள் உயிர்ப்பித்தல் திறன்களை மேம்படுத்துவதற்கும், தாய் மரணம் விகிதம் மற்றும் சிசு மரணம் விகிதத்தை மேலும் குறைப்பதற்கும் இது போன்ற சர்வதேச குழுமத்திடம் இணைந்து செயல்படும் திட்டம் பெரிய அளவில் உறுதுணையாக இருக்கும்.

தமிழகத்தில் ஆண்டுக்கு சுமார் 10 லட்சம் பிரசவங்கள் பதிவாகின்றன. கடந்த காலங்களில் ஒரு லட்சம் பிரசவங்களில் பேறு கால இறப்பு 90-ஆக இருந்தது. மருத்துவ கட்டமைப்பை விரிவுபடுத்தியதன் விளைவாக தற்போது அந்த எண்ணிக்கை 52-ஆக குறைந்திருக்கிறது. சிங்கப்பூரை பொருத்தவரை பேறு கால மரணங்கள் லட்சத்துக்கு 10-ஆக இருக்கிறது. எனவே, அவர்களது பயிற்சி முறைகள் மருத்துவ முறைகள் நமக்கு மிகப் பெரிய அளவில் பயனுள்ளதாக இருக்கும்.

தமிழகத்தில் டெங்கு பாதிப்பு கட்டுக்குள் இருக்கிறது. மாநிலம் முழுவதும் தற்போது வரை 4,703 பேர் டெங்குவால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் 420 பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதுவரை 3 பேர் உயிரிழந்துள்ளனர். டெங்கு கொசு ஒழிப்பு பணிகளுக்காக 16,005 புகையடிக்கும் இயந்திரங்கள், டைரத்திரம் 65,763 லிட்டர், மாலத்தியான் 12,493 லிட்டர், டெமிபாஸ் 48,128 லிட்டர் கையிருப்பில் உள்ளன என்றார் அவர்.

https://t.me/dinamanihighlights

# செப்டம்பரில் உச்சம் தொட்ட வெப்பம்!



**கிரானடா (ஸ்பெயின்), அக். 5:** கடந்த செப்டம்பர் மாதத்தில் உலகின் சராசரி வெப்பநிலை இது வரை இல்லாத புதிய உச்சத்தைத் தொட்டுள்ளதாக ஐரோப்பிய யூனியனின் பருவநிலைக் கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

KumarMayilsamy

இது குறித்து அந்த அமைப்பின் நிபுணர்கள் கூறியதாவது: கடந்த செப்டம்பர் மாதத்தில் உலக வளிமண்டலத்தின் சராசரி வெப்பநிலை 16.38 டிகிரி செல்சியஸாக (61.5 டிகிரி ஃபாரன்ஹீட்) பதிவாகியுள்ளது.

இந்த வெப்பம், இதுவரை இல்லாத அதிகபட்ச மாதாந்திர சராசரி வெப்பநிலையாகும். இதற்கு முன்னர் கடந்த 2020-ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டதுதான் அதிகபட்ச சராசரி வெப்பநிலையாக இருந்தது. தற்போது செப்டம்பரில் பதிவாகியுள்ள புதிய உச்சம், முந்தைய உச்சத்தைவிட 0.5 டிகிரி செல்சியஸ் அதிகமாகும்.

இதுவும், இதுவரை இல்லாத மிக அதிக உயர்வாகும். இதற்கு முன்னர் வரை முந்தைய உச்சநிலை வெப்பத்தைவிட புதிய உச்சநிலை வெப்பம் 0.1 டிகிரிக்கும் குறைவாகவே அதிகரித்து வந்தது.

https://t.me/dinamanihighlights

செப்டம்பர் மாதம் பதிவாகியுள்ள உலகின் சராசரி வெப்பநிலை, கடந்த 1991 முதல் 2020 வரையிலான சராசரி மாதாந்திர வெப்பநிலையுடன் ஒப்பிடுகையில் 0.93 டிகிரி செல்சியஸ் அதிகமாகும்.

தொழில் புரட்சிக்கு முந்தைய 1850-1900 காலகட்டத்தின் சராசரி மாதாந்திர வெப்பநிலையுடன் ஒப்பிடுகையில், கடந்த செப்டம்பரில் பதிவாகியுள்ள சராசரி வெப்பநிலை 1.75 டிகிரி செல்சியஸ் அதிகமாகும்.

இதன்மூலம், பருவநிலை மாற்றம் என்பது இன்னும் 10 ஆண்டுகளுக்குப் பிறகு வரப்போவதில்லை;இப்போதேவந்துவிட்டது என்பதை அனைவரும் உணர்ந்துகொள்ள வேண்டும் என்று ஐரோப்பிய யூனியனின் பருவநிலைக் கண்காணிப்பு அமைப்பு எச்சரித்துள்ளது.

வளிமண்டலத்தில் இருக்கும் கரியமில வாயு உள்ளிட்ட பசுமைக் குடில் வாயுக்கள்தான் பூமியில் தாவரங்களும் மற்ற உயிரினங்களும் உருவாகி தழைத்திருப்பதற்குத் தேவையான வெப்பத்தை சூரியனிடமிருந்து பெற்றுத் தருகின்றன.

ஆனால், 18-ஆம் நூற்றாண்டுகளில் மேற்கத்திய நாடுகளில் ஏற்பட்ட தொழில்புரட்சி காரணமாக தொழிற்சாலைகளாலும் வாகனங்களாலும் வளிமண்டலத்தில் கரியமில வாயு அதிகம் கலந்ததால், சூரியனிடமிருந்து அதிகவெப்பம் இழுக்கப்படுகிறது. இதனால் பூமியின் வெப்பம் அதிகரித்து, அதன் விளைவாக பருவநிலை மாற்றம் ஏற்படுகிறது.

அந்த பருவநிலை மாற்றத்தால் உலகம் முழுவதும் அளவுக்கு அதிகமான மழை வெள்ளம், வெப்ப அலை, வறட்சி போன்ற இயற்கைப் பேரிடர்கள் அதிகரித்து வருகின்றன.

இந்த நிலையில், பருவநிலை மாற்றத்தை கட்டுப்படுத்துவதற்காக பிரான்ஸ் தலைநகர் பாரீஸில் கடந்த 2015-ஆம் ஆண்டு நடைபெற்ற வருடாந்திர ஐ.நா. மாநாட்டில் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது.

அந்த ஒப்பந்தத்தில், தொழில்புரட்சிக்கு முன்பிருந்ததைவிட 1.5 டிகிரி செல்சியஸுக்கு மேல் உலகின் வெப்பநிலை உயராமல் கட்டுப்படுத்தவும், அதற்காக காற்றில் கலக்கும் கரியமில வாயுவின் அளவை படிப்படியாகக் குறைக்கவும் இந்தியா உள்ளிட்ட 195 நாடுகள் ஒப்புக்கொண்டன.

இருந்தாலும்,அதற்கான நடவடிக்கைகள் மிகத் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை செப்டம்பர் மாதம் உச்சத்தைத் தொட்டுள்ள சராசரி வெப்பம் உணர்த்துவதாக ஐரோப்பிய யூனியன் நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

# நார்வே எழுத்தாளருக்கு நோபல் பரிசு



ஸ்டாக்ஹோம், அக். 5: நடப்பாண்டு இலக்கியத்துக்கான நோபல் பரிசு, நார்வே நாட்டின் புகழ்பெற்ற எழுத்தாளர் ஜான் ஃபோஸேவுக்கு (64) அறிவிக்கப்பட்டுள்ளது.

நாடகங்கள், நாவல்கள், கவிதைகள், குழந்தைகளுக்கான புத்தகங்கள் வரை தனது பரந்துபட்ட எழுத்துகளின் மூலம் இதுவரை பேசப்படாத கருத்துகளை வெளிக்கொண்டு வந்ததற்காக, அவருக்கு இக்கௌரவம் அளிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக ஸ்வீடன் அகாதெமி வியாழக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பில், 'நார்வீஜியன் மொழியின் நைனோர்ஸ்க் எழுத்து வடிவில் எழுதப்பட்ட ஜான் ஃபோஸேயின் படைப்புகளில் நாடகங்கள், நாவல்கள், சிறுகதைகள், குழந்தை புத்தகங்கள், கவிதைகள் மற்றும் கட்டுரைகள் அடங்கும். அவ [illegible] நாட்டின் மொழி மற்றும் இயல்போடு இரண்டற கலந்தவையாகும்.



KumarMayilsamy

தனது புத்தாக்கமான நாடகங்கள் மற்றும் உரைநடைகளின் மூலம் இதுவரை பேசப்படாத கருத்துகளை வெளிக்கொண்டு வந்துள்ளார். நார்வேயின் முக்கியமான நாடக எழுத்தாளர்களில் ஒருவரான ஃபோஸே, 40-க்கும் மேற்பட்ட நாடகங்களை படைத்துள்ளார்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலக்கியத்துக்கான நோபல் பரிசானது, தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழுடன் 1 மில்லியன் டாலர் (சுமார் ரூ.8.32 கோடி) பரிசுத் தொகையை கொண்டதாகும். ஸ்டாக்ஹோமில் டிசம்பரில் விருது வழங்கும் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

## நோபல் வென்ற 4-ஆவது நார்வே எழுத்தாளர்



ஜான் ஃபோஸே

நார்வே நாட்டைச் சேர்ந்த எழுத்தாளர்கள் கடந்த 1903, 1920, 1928 ஆகிய ஆண்டுகளில் நோபல் பரிசை பெற்றனர். இப்போது நோபல் வென்றுள்ள 4-ஆவது நார்வே எழுத்தாளர் ஜான் ஃபோஸே ஆவார்.

அவரது 'ஏ நியூ நேம்: செப்டோலஜி VI-VII', கடந்த 2022-ஆம் ஆண்டில் சர்வதேச புக்கர் பரிசுக்கான இறுதித் தேர்வுகளில் ஒன்றாக இருந்தது. இப்புத்தகம், ஜான் ஃபோஸேயின் மகத்தான படைப்பு என்று நோபல் இலக்கிய கமிட்டியின் தலைவர் ஆண்டர்ஸ் ஆல்ஸன் புகழாரம் சூட்டியுள்ளார்.




ஃபோஸோயின் எழுத்துகள் 50-க்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. நார்வே மற்றும் ஐரோப்பாவின் முக்கிய இலக்கிய விருதுகளை வென்றுள்ள இவர், இலக்கியத்துக்கான நோபல் பரிசு பெறுவார் என பரவலாக எதிர்பார்க்கப்பட்டது.

பிற மொழி இலக்கியங்களை நார்வீஜியன் மொழியில் மொழிபெயர்த்துள்ளார்.

https://t.me/dinamanihighlights

## இன்று அமைதிக்கான நோபல்

மருத்துவம், இயற்பியல், வேதியியல், இலக்கியம் ஆகிய துறைகளுக்கான நோபல் பரிசுகள் இதுவரை அறிவிக்கப்பட்டுள்ளன. அமைதிக்கான நோபல் பரிசு வெள்ளிக்கிழமையும், பொருளாதாரத்துக்கான நோபல் பரிசு திங்கள்கிழமையும் (அக்.9) அறிவிக்கப்படவுள்ளது.

# வள்ளலார் காட்டிய வழியில் மத்திய அரசு

## பிரதமர் மோடி பெருமிதம்

சென்னை, அக். 5: வள்ளலார் காட்டிய வழியில் மத்திய அரசு செயல்படுகிறது என்று பிரதமர் நரேந்திர மோடி பெருமிதத்துடன் கூறினார்.

வடலூர் வள்ளலார் தெய்வ நிலையத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற ஸ்ரீ ராமலிங்க சுவாமிகளின் 200-ஆவது பிறந்தநாள் நிறைவை முன்னிட்டு காணொலிக் காட்சி மூலம் பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றினார். இந்தப் பேச்சு சென்னை கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற வள்ளலார் விழாவில் மறு ஒளிபரப்பு செய்யப்பட்டது. அப்போது பிரதமர் பேசியது:

வள்ளலாரின் தாக்கம் உலக அளவிலானது; அவரின் சிந்தனைகள், லட்சியங்களைப் பின்பற்றி பல அமைப்புகள் செயல்படுகின்றன. சக மனிதர்களிடம் இரக்கம் காட்டுவதை வாழ்க்கை முறை என வள்ளலார் நம்பினார்; பசியைப் போக்குவதே அவரின் மிக முக்கியமான பணியாக இருந்தது; பசித்தவர்களுடன் உணவைப் பகிர்வது எல்லா இரக்க நடவடிக்கைகளிலும் மிகவும் உன்னதமானது என்று நம்பினார்.

**80 கோடி மக்களுக்கு...:** பயிர்கள் வாடுவதைக் காணும் போதெல்லாம், தானும் வாடியதாக கூறினார்; அவரின் லட்சியத்தை மத்திய அரசு பின்பற்றுகிறது; அதனால்தான் கரோனா பெருந்தொற்றுக் காலத்தில் 80 கோடி மக்களுக்கு இலவச உணவு தானியங்களை மத்திய அரசு வழங்கியது.

வள்ளலாருடன் நெருங்கிய தொடர்புடைய இடமான வடலூரில் நிகழ்ச்சி நடைபெறுவது குறித்து மகிழ்ச்சி. வள்ளலார் 19-ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் வாழ்ந்த மிகவும் மரியாதைக்குரிய மகான்களில் ஒருவர்; அவரின் ஆன்மிக போதனைகள் இன்றும் கோடிக்கணக்கானவர்களுக்கு ஊக்கமளிக்கின்றன.

**சமத்துவ சமுதாயத்துக்காக...:** ஒவ்வொரு அணுவிலும் தெய்விகத்தைக் கண்டவர் வள்ளலார்; அவரின் போதனைகள் சமத்துவ சமுதாயத்துக்காக பாடுபடுவதை நோக்கமாகக் கொண்டிருப்பதால், அவருக்கு அஞ்சலி செலுத்தும்போது அனைவரும் இணைவோம்.



**தேசிய கல்விக் கொள்கை:** தமிழ், சம்ஸ்கிருதம், ஆங்கிலத்தில் இளைஞர்கள் சரளமாகப் பேச வேண்டும் என்று வள்ளலார் விரும்பினார். 30 ஆண்டுகளுக்குப் பிறகு தேசிய கல்விக் கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது. இதில் புதிய கண்டுபிடிப்புகள், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டில் கவனம் செலுத்தப்படும். அதே நேரத்தில் முழுக் கல்விச் சூழலையும் தேசிய கல்விக் கொள்கை மாற்றுகிறது.

மேலும், இளைஞர்கள் தங்கள் தாய்மொழிகளில் படிப்பதன் மூலம் சிறந்த கல்வியாளர்களாக வரமுடியும். வள்ளலாரின் கடவுள் மீதான பார்வை மதம், ஜாதி, இனம் போன்ற எல்லைகளைத் தாண்டியது.

வள்ளலார் உயிருடன் இருந்தால் மக்களவை மற்றும் சட்டப்பேரவைகளில் பெண்களுக்கு இட ஒதுக்கீடு வழங்க வகை செய்யும் மகளிர் இட ஒதுக்கீடு மசோதா நிறைவேற்றியதைப் பாராட்டியிருப்பார்.

வள்ளலாரின் படைப்புகள் படிக்கவும் புரிந்துகொள்ளவும் எளிதானவை; சிக்கலான ஆன்மிக ஞானத்தை எளிய சொற்களில் வெளிப்படுத்துகின்றன.

'ஒரே பாரதம் உன்னத பாரதம்' என்ற கூட்டு எண்ணத்துக்கு வலுசேர்க்கும் வகையில் மகான்களின் போதனைகள் உள்ளன. வள்ளலாரின் கொள்கைகளான அன்பு, கருணையை அனைவரும் பரப்ப வேண்டும்.

நம்மைச் சுற்றி யாரும் பட்டினியாக இருக்காமல் பார்த்துக் கொள்வோம். ஒவ்வொரு குழந்தைக்கும் தரமான கல்வி கிடைப்பதை உறுதி செய்வோம் என்றார் பிரதமர் மோடி.

## பாரதத்தைப் புரிந்துகொள்ள...

### ஆளுநர் ஆர். என். ரவி

சென்னை, அக். 5: பாரதத்தைப் புரிந்துகொள்ள வள்ளலாரைப் புரிந்துகொள்ள வேண்டும் என ஆளுநர் ஆர்.என். ரவி தெரிவித்தார்.



சென்னையில் உள்ள ஆளுநர் மாளிகையில் 'வள்ளலார்– 200' பிறந்தநாள் நிறைவு விழா வியாழக்கிழமை கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்வின் தொடக்கத்தில் ஆளுநர் மாளிகையில் அமைக்கப்பட்டுள்ள வள்ளலாரின் உருவச் சிலையை ஆளுநர் ரவி திறந்து வைத்து, அணையா தீப ஒளியை ஏற்றி வைத்தார்.

பின்னர், அவர் பேசியதாவது: தமிழகத்துக்கு வந்த பிறகு தெய்விக ஆன்மாவான வள்ளலார் குறித்து அறிந்தேன்; அவரின் 200–ஆவது பிறந்தநாள் நிறைவில் அவரின் சிலையைத் திறக்க வேண்டும் என்ற எனது விருப்பம் சாத்தியமாகியுள்ளது.

வள்ளலாரின் கருத்துகள் பாரதத்தின் அடையாளத்தை வலுப்படுத்தியுள்ளன. ஆங்கிலேயர் வருகைக்கு முன்பு காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை உள்ள மக்களுக்கு 'பாரதம்' என்றால்தான் தெரியும். ஆன்மிகவாதிகள், ரிஷிகள் மூலம் பாரதம் உருவாக்கப்பட்டது. இங்கு உடை, மொழி எனப் பல வேற்றுமைகள் இருப்பினும், அனைவரும் ஒன்றாக இருக்கிறோம்.

வளர்ச்சி என்பது வெறும் அறிவியல், பொருளாதார வளர்ச்சியாக அல்லாமல், ஆன்மிகத்துடன் கூடியதாக இருக்க வேண்டும். நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை வள்ளலார் கூறியுள்ளார். பாரதத்தைப் புரிந்துகொள்ள வள்ளலாரைப் புரிந்துகொள்ள வேண்டும் என்றார் ஆளுநர் ரவி.

இந்த நிகழ்வில் ஆளுநரின் முதன்மைச் செயலர் ஆர். கிர்லோஷ்குமார், வள்ளலார் விழா ஒருங்கிணைப்பாளர் வி. பிரபாகரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



சென்னையில் வியாழக்கிழமை நடைபெற்ற 'வள்ளலார்– 200' ஓராண்டு தொடர் அறநிகழ்வு நிறைவு விழாவில் வடலூரில் சுமார் ரூ.100 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள வள்ளலார் சர்வதேச மையத்துக்கான ஆணையை வள்ளலார் முப்பெரும் விழா சிறப்புக் குழுவின் தலைவர் பி.கே.கிருஷ்ணராஜ் வாணவராயரிடம் வழங்கிய முதல்வர் மு.க.ஸ்டாலின். உடன் அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, மேயர் ஆர்.பிரியா, திருவாவடுதுறை ஆதீனம் அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள், குன்றக்குடி ஆதீனம் பொன்னம்பல அடிகளார் உள்ளிட்டோர்.

## ரூ.100 கோடியில் வள்ளலார் சர்வதேச மையம்: ஆணை ஒப்படைப்பு

சென்னை, அக். 5: வடலூரில் சுமார் ரூ.100 கோடியில் வள்ளலார் சர்வதேச மையம் அமைப்பதற்கான தமிழக அரசின் ஒப்புதல் ஆணையை வள்ளலார் முப்பெரும் விழாக் குழுவினரிடம் முதல்வர் மு.க.ஸ்டாலின் வியாழக்கிழமை வழங்கினார்.

'வள்ளலார் –200' ஓராண்டு தொடர் நிகழ்வுகளின் நிறைவு விழா சென்னையில் வியாழக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசுகையில், கடலூரில் 17 ஏக்கரில் புதிய பேருந்து நிலையம் அமைக்கப்பட உள்ளது. இந்தப் பேருந்து நிலையத்துக்கு அருட்பிரகாச வள்ளலார் பெயர் சூட்டப்படும் என்றார்.

மேலும், வடலூரில் வள்ளலார் பெயரில் சர்வதேச மையம் அமைக்கப்படும் என சட்டப்பேரவையில் ஏற்கெனவே அறிவித்தபடி, அதற்கான ஒப்புதல் உத்தரவை முப்பெரும் விழா குழுத் தலைவர் கிருஷ்ணராஜ் வாணவராயரிடம் முதல்வர் வழங்கினார். இந்த மையம் சுமார் ரூ.100 கோடி மதிப்பீட்டில் அமையவுள்ளது.